புனரமைப்புப் பணி தொடக்கம்...

மயிலாப்பூர் அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயிலை கருங்கல்லால் புனரமைக்கும் பணியை தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலம் வியாழக்கிழமை தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் இரா.சுகுமார், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்துக்கு முக்கியத்துவம்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு

சென்னை, ஜன. 23: வடசென்னை வளர்ச்சித்திட்டத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், எண்ணூரில் சமுதாய நலக்கூடம் மற்றும் நவீன சந்தை, தண்டையார்பேட்டை பேருந்து நிலையம், கொண்டித்தோப்பு ரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் குடியிருப்பு கட்டுமானப் பணிகளை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வியாழக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வடசென்னை வளர்ச்சித் திட்டத்துக்கு அதிக முக்கியத்துவம் தந்து பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டு இறுதிக்குள் பயனாளிகள் பயன்படுத்தும் வகையில், பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணூரில் 58 சிறு வணிகக் கடைகளும், 300 பேர் அமரும் வகையில் சமுதாயநலக் கூடம் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தண்டையார்பேட்டை பேருந்து நிலையம், வணிக கட்டடத்துடன் பேருந்து செல்லும் வகையில் கட்டப்பட்டு வருகிறது.

இந்தப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என துறை சார்ந்த அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. முதல்வரின் கனவுத் திட்டமான வடசென்னை வளர்ச்சித்திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்றார் அவர்.

ஆய்வின்போது, சென்னை மேயர் ஆர்.பிரியா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலர் காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா உள்ளிட்ட உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

சென்ட்ரல் சதுக்க மேம்பாட்டு கட்டுமானப் பணி: ரூ. 350 கோடிக்கு ஒப்பந்தம்

சென்னை, ஜன. 23: சென்னை சென்ட்ரல் சதுக்க மேம்பாட்டுக்கான புதிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள ரூ. 349.99 கோடிக்கு 'ரெனாடஸ் புராஜெக்ட் பிரைவேட் நிறுவனத்துடன்' ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னையின் முக்கிய அடையாளமாக சென்ட்ரல் சதுக்கம் மாறியுள்ளது. இதை மேம்படுத்தும் நோக்கில், சென்ட்ரல் ரயில் நிலையத்தின் அருகில் 27 மாடிகள் கொண்ட பிரம்மாண்ட கட்டடம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ்நாடு தொழில் துறை மேம்பாட்டுக் கழகம் இணைந்து உருவாக்கியுள்ள சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் இதற்கான பணிகளை முன்னெடுத்து வருகிறது.

இதன் கட்டுமானம், மின் தூக்கி, நகரும் படிக்கட்டுகள் உள்ளிட்ட பணிகளுக்கு ரூ. 349.99 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தை ரெனாடஸ் புராஜெக்ட் பிரைவேட் நிறுவனத்துக்கு சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் நிகழ்ச்சி, மெட்ரோ ரயில்வே நிறுவன தலைமை அலுவலகத்தில் வியாழக்கிழமை (ஜன. 23) நடைபெற்றது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக் முன்னிலையில் நடைபெற்ற சென்ட்ரல் கோபுரத்தின் மேம்பாட்டுக்கான கட்டுமான பணிகளுக்கான ஒப்பந்த பரிமாற்ற நிகழ்வில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன இயக்குநர் தி.அர்ச்சுனன், ரெனாடஸ் புராஜெக்ட் பிரைவேட் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் எஸ்.மனோஜ் பூசப்பன். உடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவன திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு தலைமை பொது மேலாளர் ரேகா பிரகாஷ், டி.லிவிங்ஸ்டோன் எலியாசர், திட்ட மேலாளர் ஜி.தணிகைசெல்வன்.

இதில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும், சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனத்தின் தலைவருமான எம்.ஏ.சித்திக், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர் தி.அர்ச்சுனன் மற்றும் ரெனாடஸ் புராஜெக்ட் பிரைவேட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எஸ். மனோஜ் பூசப்பன் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

நவீன வாசிக்கும் கருவி: பார்வை மாற்றுத்திறன் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஜன. 23: தென் சென்னை மாவட்டத்துக்குட்பட்ட பார்வை மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் நவீன வாசிக்கும் கருவி பெற விண்ணப்பிக்கலாம்.

இது குறித்து சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் கீழ் செயல்படும் சிறப்புப் பள்ளிகள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் பார்வை மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு நவீன வசதிகள் கொண்ட வாசிக்கும் கருவி வழங்கப்படவுள்ளது.

இக்கருவியில், இணையதள வசதியுடன் கூடிய வானொலி, யுஎஸ்பி, பென்டிரைவ் மற்றும் எஸ்டி கார்டு செருகும் வசதி, தமிழ் மற்றும் பிற மொழிகளில் படிக்க உதவும் வசதி, வை-பை வசதி தவிர, கைப்பேசியின் ஹாட்ஸ்பாட்டுடன் இணைக்கும் வசதி மற்றும் குரல் குறிப்புகள், உரை குறிப்புகளை பதிவு செய்யும் வசதி, பார்வை மாற்றுத்திறனாளிகளால் பயன்படுத்தக் கூடிய வகையில் எளிதாக படிக்கவும் பேசக் கூடியதாகவும் மற்றும் எளிதாக தொட்டுணரக்கூடிய வகையிலான பொத்தான்கள் இதில் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கருவியை பெற விரும்பும் பார்வை மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் அருகாமையிலுள்ள இ-சேவை மையம் அல்லது https://www.tnesevai.tn.gov.in/Citizen/Registration.aspx என்னும் அதிகாரபூர்வ இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். கூடுதல் தகவல்களுக்கு, தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்திலுள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 044 - 24714758 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

12,500 'சிங்கார சென்னை' பயண அட்டைகள் விற்பனை

சென்னை, ஜன. 23: சென்னையில் பொதுப் போக்குவரத்துகளில் பயன்படுத்துவதற்காக, இதுவரை 12,500 சிங்கார சென்னை பயண அட்டைகள் விற்பனையாகியுள்ளதாக போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் மெட்ரோ ரயில்கள், புறநகர் மின்சார ரயில்கள் மற்றும் மாநகரப் பேருந்துகள் என அனைத்து பொதுப் போக்குவரத்திலும் ஒரே ஸ்மார்ட் அட்டையை பயன்படுத்தி எளிதாக பயணிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் பயன்படுத்தும் வகையில், 'சிங்கார சென்னை ஸ்மார்ட் அட்டை' திட்டம் கடந்த 2023-இல் அறிமுகம் செய்யப்பட்டது.

ரீசார்ஜ் செய்து பயன்படுத்தும் வகையிலான இந்த ஸ்மார்ட் அட்டையைப் பயன்படுத்தி மாநகரப் பேருந்துகளிலும் பயணம் செய்யும் நடைமுறை சமீபத்தில் அமல்படுத்தப்பட்டது.

இந்த ஸ்மார்ட் அட்டைகள் கிளாம்பாக்கம், வடபழனி, பெரம்பூர், சைதாப்பேட்டை உள்ளிட்ட பேருந்து நிலையங்களில் உள்ள மாநகரப் போக்குவரத்துக் கழக பயணச்சீட்டு விற்பனை மையங்களில் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகிறது.

விரைவில் மின்சார ரயில்கள், விரைவு ரயில்களிலும் இந்த ஸ்மார்ட் அட்டையை பயன்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இதுவரை 12,500 சிங்கார சென்னை பயண அட்டைகள் விற்பனையாகியுள்ளதாக போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். இதில் 60 சதவீதத்துக்கும் மேற்பட்ட பயணிகள், மாநகர் போக்குவரத்துக்கழக பேருந்து சேவைகளுக்கு இதனை பயன்படுத்துவதாகவும், இந்த அட்டையை பயன்படுத்தி பயணச்சீட்டு வழங்கும் வகையில் தற்போது 3,900 பேருந்துகளில் மின்னணு இயந்திரம் பயன்பாட்டில் இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

LOYOLA COLLEGE, CHENNAI - 600 034
AIDED NON-TEACHING STAFF VACANCIES
(FOR THE ACADEMIC YEAR 2024 - 2025)

Applications are requested for the following Aided Non-teaching staff category. The qualifications and age are as prescribed under the rules admissible. The applications should be sent by post to the Secretary & Correspondent, Loyola College, Chennai - 600 034 within 10 days from the date of publication of advertisement. In addition to the Hard copy of the application sent by post, kindly send also a soft-copy to the email: secretary@loyolacollege.edu

Post	Vacancy	Qualification	AGE		
			SC/ST	BC/MBC	Others
Typist	2	Must have passed the S.S.L.C Technical (Typing) Both (English & Tamil) Senior grade (Higher) (or) English (Higher) & Tamil (Lower) grade (or) Tamil (Higher) & English (Lower) grade	35 Years	32 Years	30 Years
Lab Assistant	9	Must have passed the S.S.L.C	35 Years	32 Years	30 Years
Record Clerk	3	Must have passed the S.S.L.C	35 Years	30 Years	30 Years
Office Assistant	8	Must have passed VIII Std	35 Years	30 Years	30 Years
Sweeper	6	Must have passed VIII Std	35 Years	30 Years	30 Years
Watchman	2	Must have passed VIII Std	35 Years	30 Years	30 Years
Waterman	2	Must have passed VIII Std	35 Years	30 Years	30 Years
Gardener	2	Must have passed VIII Std	35 Years	30 Years	30 Years
Scavenger	2	Must have passed VIII Std	35 Years	30 Years	30 Years
Marker	3	Must have passed VIII Std	35 Years	30 Years	30 Years
Store Keeper	1	Must have passed VIII Std	35 Years	30 Years	30 Years
TOTAL	40				

Secretary & Correspondent
Loyola College, Chennai-34

SIMPLY CLICK TO GRAB THE BEST PROPERTY AT THE BEST PRICE.
INVITING YOU TO PARTICIPATE IN
BOI Mega e-Auction
27TH JANUARY 2025
1300+ Residential Properties
Pan India for e-Auction
Transparent & Easy Process | Attractive Rates | Variety of Options
Loans Available for Successful Bidders (subject to eligibility)
For more details
visit: https://baanknet.com
Auction Link: https://baanknet.com/eauction-psb/home/boi
email: HeadOffice.AR@bankofindia.co.in
Chennai Zone : 044 - 6677 7459
Coimbatore Zone : 0422 - 2397221
Madurai Zone : +91 91500 43296
Bank of India
Relationship beyond banking
Toll Free No.: 1800 220 229 / 1800 103 1906 | Visit : www.bankofindia.co.in | Follow us on

கோயம்புத்தூர் மாநகராட்சி
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை (e-Tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.(e)5/2025 நாள் : 22.01.2025

வ. எண்	பணியின் விவரம்	மொத்த பணிகளின் எண்ணிக்கை	ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம்	ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம்
1	வார்டு எண். 8, 29, 30, 40, 41, 48, 66, 68, 69, 72, 78, 86க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல்	13 பணி	10.02.2025 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock)	11.02.2025 மாலை 4.00 மணி (As per the Server Clock)

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in, ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் – 641001. தொலைபேசி எண்:0422–2396026. Email : commr.coimbatore@tn.gov.in

செ.ம.தொ.இ./266/ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.

IDBI BANK
CIN - L65190MH2004GOI148838

கீழ்க்கண்ட நபர்கள் எங்களது வங்கியில் லாக்கர் வசதியை பெற்றுள்ளனர் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

எங்கள் பெரியார் நகர் கிளையில் லாக்கர் வைத்திருப்பவர்கள் கீழ்காணும் லாக்கர் கணக்கு பல்வேறு அறிவிப்புகள் மற்றும் கோரிக்கைகளுக்குப் பிறகும் நிர்ணயிக்கப்பட்ட லாக்கர் வாடகையை நீண்ட காலமாக செலுத்த தவறி புறக்கணித்துள்ளனர். லாக்கர் வைத்திருப்பவர்கள் ஒப்புக்கொண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி, வாடகை செலுத்தாத பட்சத்தில், அந்த லாக்கர்களை உடைத்து திறப்பதற்கு வங்கிக்கு முழு உரிமை உண்டு என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். அதன்படி **23.04.2025** அன்று கீழ்கண்ட லாக்கரை உடைத்து திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது மற்றும் அந்த லாக்கர் வைத்திருப்பவர் உரிய தேதிக்கு முன்பே கிளை அலுவலரை அணுகி நடவடிக்கையைத் தவிர்த்து நிலுவைத் தொகையை செலுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள். லாக்கரை உடைத்து திறப்பதற்கான கட்டணங்கள், வாடகைதாரே ஏற்க வேண்டும் மற்றும் வாடகை நிலுவைகள், பிற கட்டணங்கள் போன்றவற்றை வசூலிக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்க வங்கிக்கு உரிமை உண்டு.

கணக்கு எண்/ லாக்கர் எண் / வாடிக்கையாளர் பெயர் / முகவரி	கிளை விவரங்கள்
லாக்கர் எண்: G1 - 19 பெயர்: திரு. நரசிம்ஹுலு. K. S கணக்கு எண்: 718104000002295 முகவரி: எண். 93/39, S R P கோயில் தெரு, அகரம், சென்னை, பின் கோடு -600082, தமிழ்நாடு	ஐடிபிஐ வங்கி, பெரியார் நகர் கிளை "ஸ்ரீ லட்சுமி", B-26, கார்த்திகேயன் சாலை, பெரியார் நகர், சென்னை-600 082 போன் : 044-46907118

தேதி : 23-01-2025 ; இடம் : சென்னை அதிகாரப்பூர்வ அதிகாரி, ஐடிபிஐ வங்கி லிட்

ஆயிரம் விளக்கு கிளை
5, கிரீம்ஸ் ரோடு, ஆயிரம் விளக்கு,
சென்னை-600 006, Ph: 044 -2999 6216 / 2999 5578 / 98922 67770 / Email: cb0941@canarabank.com

Canara Bank கனரா வங்கி

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கனரா வங்கி, ஆயிரம் விளக்கு கிளையில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்து **கனரா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கடன் தொகையான **21.01.2025 அன்றுள்ளபடி ₹ 3,74,33,097.60** (ரூபாய் மூன்று கோடியே எழுபத்து நான்கு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து தொண்ணூற்று ஏழு மற்றும் பைசா அறுபது மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளை **கனரா வங்கி-ன், ஆயிரம் விளக்கு கிளை** வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **26.02.2025 அன்று காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை விற்பனை செய்யப்படும்** என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்/ஜாமீன்தார்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்கள்: 1) M/s MH எலக்ட்ரானிக்ஸ், 32 24, தரைத்தளம், வெங்கட தெரு, மண்ணடி, சென்னை-600 001, **2)M/s ஹாம் எலக்ட்ரானிக்ஸ்**, எண்.131/132, J நகர், 2வது தெரு, பனையூர், சோழிங்கநல்லூர், சென்னை-600119, **3) Mrs.ஹலிமா**, எண்.30, வெங்கட தெரு, AB ஹவுஸ், சென்னை - 600001

அசையா சொத்து விவரம்

தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் விருகம்பாக்கம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.70/2, TSLR படி பிளாக் எண்.23, T.S.எண்.12, சர்வே எண்.70/2A1, மாநகராட்சி டிவிஷன் எண்.65, **எண்.104, விருகம்பாக்கம் கிராமம், மாம்பலம் தாலுகா, சென்னை மாவட்டம், சொர்ணாம்பிகை நகர், விருகம்பாக்கம், சென்னை-600 092** என்னும் முகவரியிலுள்ள **2841 சதுர அடி காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: Mrs.அமர்ஜோதி-க்கு சொந்தமான கதவு எண்.16, பழைய எண்.29-A, அதனுடன் சொர்ணாம்பிகை நகரில் உள்ள 24 அடி அகல சாலைக்கு செல்லும் 9.6 அடி வழிப்பாதை, தெற்கு: Mr.S.நடராஜன்-க்கு சொந்தமான புதிய கதவு எண்.14, பழைய எண்.7, கிழக்கு: Mrs.பத்மாவதி விஸ்வநாதன்-க்கு சொந்தமான காலி நிலம், மேற்கு: லேட் சுவாமிநாதன் கிருஷ்ணமூர்த்தி-க்கு சொந்தமான வீட்டு எண்.14. அளவுகள்: வடக்கு பக்கம் : 12.8 M & 2.9 M (42'0" & 9'6"), தெற்கு பக்கம்: 5.7 M & 12.4 M (18'5" & 40'6"), கிழக்கு பக்கம்: 28.7 M (94'0"), மேற்கு பக்கம்: 10.6 M & 17.4 M (34'9" & 57'0"), ஆக மொத்தம் 2841 சதுர அடி காலி நிலம். **சொத்தானது Mrs.ஹலிமா-க்கு சொந்தமானது.**

குறைந்தபட்ச கேட்பு விலை	₹ 2,84,00,000/-	டேவணித் தொகை	₹ 28,40,000/-	ஏல உயர்வுத்தொகை	₹ 1,00,000/-

இ-ஏல தேதி & நேரம் 26.02.2025 நேரம்: காலை 11.30 முதல் மதியம் 12.30 வரை (விற்பனை முடியும் வரை ஒவ்வொரு 5 நிமி. வரையறையற்ற நீட்டிப்புகளுடன்)

டேவணித் தொகையினை 25.02.2025 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மாலை 4.00 மணிக்குள் செலுத்த வேண்டும்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி பெற்று சொத்தினை பார்வையிட தேதி மற்றும் நேரம்: 24.02.2025 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

EMD Remittance: The intending bidders shall deposit Earnest Money Deposit (EMD) mentioned above being of 10% of the Reserve Price in E-Wallet of M/s PSB Alliance Private Limited (BAANKNET) portal directly.

விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் **(www.canarabank.com)** வழங்கப்பட்ட மின் ஏலம் என்ற இணைப்பை பார்க்கவும். அல்லது வங்கியின் சேவை வழங்குனர் **M/s BAANKNET (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No.70466 12345/ 63549 10172/ 82912 20220/ 98922 19848/ 81602 05051, Email: support.ebkray@psballiance.com)-ல் தொடர்பு கொள்ளவும் முதன்மை மேலாளர், கனரா வங்கி, ஆயிரம் விளக்கு கிளை, (Mob: 98922 67770)** அல்லது **கோட்ட மேலாளர், மண்டல அலுவலகம், சென்னை தெற்கு (Mob: 94983 46053/ 90252 43215)** எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

Portal of E-Auction: https://baanknet.com

தேதி : 21.01.2025, இடம் : சென்னை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி

கொங்கன் ரயில்வே கார்ப்பரேஷன் லிமிடெட்
(ஓர் இந்திய அரசு நிறுவனம்)
வரையறுக்கப்பட்ட மின் - ஒப்பந்தப்புள்ளி (ஒற்றை படிநிலை முறை) அழைப்பு அறிவிப்பு

பணியின் பெயர்: தமிழ்நாடு மாநிலம், தென்னக ரயில்வே, சென்னை கோட்டத்தின் சென்னை - ரேணிகுண்டாவுக்கு இடையேயான 2X25KV இழுவை அமைப்புக்கான OHE பணிகளை நிறுவுதல். **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: KR/CO/EL/MAS-RU/T/05/25, நாள்: 24.01.2025. பணிநிறைவு கால அளவு: 12 (பன்னிரண்டு) மாதங்கள். மதிப்பிடப்பட்டுள்ள செலவு :** ரூ.6,23,90,837/- GST நீங்கலாக **டேவணித் தொகை :** ரூ.4,62,000/- **இணைய வழியில் ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் & நேரம்:** 07.02.2025 **15.00 மணி வரை. ஒப்பந்தப்புள்ளி திறப்பு:** 07.02.2025 15.30 மணி. திருத்தல்கள் / திருத்தம் ஏதேனும் இருப்பின் அவை IREPS இணையத்தளத்தில் மட்டுமே பதிவேற்றம் செய்யப்படும். **ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பித்தல்:** IREPS வழியாக மட்டுமே. காகித வடிவிலான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING
ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பௌண்டு, வேரவல், குஜராத் - 362266.
கிளை அலுவலகம்: அலகு #10 & 12, 6வது மற்றும் 4வது தளம்,
ஓவல் பில்டிங், வெங்கட் நாராயண் சாலை, தி.நகர், சென்னை - 600 017.

பிற்சேர்க்கை-IV-'A'
[விதி 8(6)-ன் நிபந்தனைகளைப் பார்க்க]
அசையாச் சொத்துகள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6)&9(1) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு. ஈடுபெற்று கடன் வழங்கிய ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டு எண். 335/2022 இல், இடைக்கால விண்ணப்ப எண். 9864/2022 இல், பம்பாயில் உள்ள மாண்புமிகு உயர்நீதிமன்றம், ஜனவரி 11, 2023 தேதியிட்ட அதன் உத்தரவின் மூலம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை A அசையாச் சொத்தை விற்க ஈடுபெற்று கடன் வழங்கிய நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்: ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள நிறுவனத்திடம் (Secured Creditor) அடமானம் / ஈடு வைக்கப்பட்டுள்ள, இங்கே விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துகள், ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிட்-ன் (Secured Creditor) அதிகாரபூர்வ அலுவலர் அவர்களால் நேரடி சுவாதீனத்தில் (Physical Possession) எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்தச் சொத்துகள், கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் அதாவது (i) M/s. நாதெள்ள சம்பத்து செட்டி அண்டு கோ., M/s.நாதெள்ள சுலோசனம்மா அறக்கட்டளை, M/s. நாதெள்ள சம்பத் ஜுவெல்லரி பிரைவேட் லிமிடெட், M/s.பரமார்த்த பூதானம் ஸ்ரீ நாதெள்ள சம்பத்து செட்டி தொண்டு நிறுவனங்கள் (கடன்தாரர்கள்) (ii) திரு. நாதெள்ள ரங்கநாத குப்தா, திரு.நாதெள்ள பிரபண்ண குமார், திரு.நாதெள்ள பிரசன்ன குமார், திருமதி. நாதெள்ள ராதிகா மற்றும் திருமதி. நாதெள்ள லக்ஷ்மி பிரியா (ஜாமீன்தாரர்கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்று கடன் வழங்கிய மேற்படி நிறுவனத்திற்குச் சேரவேண்டிய கடன் பாக்கி 31.03.2024 அன்றுள்ளபடியான ரூ.88,66,14,721.74/- (ரூபாய் எண்பத்தெட்டு கோடியே அறுபத்தாறு லட்சத்து பதினான்காயிரத்து எழுநூற்று இருபத்தொன்று மற்றும் எழுபத்து நான்கு பைசா மட்டும்) மற்றும் அத்தொகை செலுத்தப்படும் வரை சேரும் வட்டி மற்றும் கட்டணங்கள் சேர்த்து வசூலிப்பதற்காக 'உள்ளது உள்ளவாறு', 'உள்ள இடத்தில் உள்ளவாறு', 'உள்ளதெல்லாம் உள்ளவாறு' மற்றும் 'பின்தொடர்ச்சி எதுவும் அனுமதிக்கமுடியாது' எனும் அடிப்படையில் 11 பிப்ரவரி 2025 அன்று விற்கப்படவுள்ளன.

குறைந்தபட்ச (ரிசர்வ்) விலை மற்றும் EMD தொகை பின்வருமாறு:

அசையாச் சொத்துகளின் விவரம்	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (10%)
பள்ளிக்கூட மனையாகிய நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு 1 ஏக்கர் மற்றும் 8 செண்ட் (43.5 ஏர்ஸ்) அல்லது 47,088 சதுர அடி, அமைவிடம் அங்கீகரிக்கப்பட்ட லே அவுட் LPDM/DTCP எண். 31/70, 3/71, மற்றும் 4/71, சர்வே எண். 255/1, இது பட்டா எண்.1539-ன் படி புதிய சர்வே எண். 255/37, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, வரதராஜபுரம் கிராமம் எண்.111 இல் அமைந்துள்ளது மற்றும் எல்லையாக வடக்கே:30 அடி சாலை (தாசில்தார் சுப்பிரமணியம் சாலை), தெற்கே:30 அடி சாலை (டெபுடி கலெக்டர் செல்லையா சாலை), கிழக்கே:30 அடி சாலை (T. சீனிவாசன் ஐ.ஏ.எஸ். சாலை), மேற்கே: மனை எண்.1555, 1563, 23 அடி சாலை, மனை எண்.1454, 1570. படப்பை துணைப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ள இந்த சொத்து, வரதராஜபுரம் பஞ்சாயத்து மற்றும் குன்றத்தூர் படப்பை பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள் உள்ளது.	ரூ. 4,76,76,600/-	ரூ. 47,67,660/-

விற்பனை குறித்த விரிவான விதிமுறை நிபந்தனைகளுக்கும், மற்ற விவரங்களுக்கும் ஈடு பெற்று கடன் வழங்கிய நிறுவனத்தின் இணையதளம் பார்க்கவும்: https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx மற்றும் இணையதளம் https://sarfaesi.auctiontiger.net

நாள்: 24.01.2025
இடம் சென்னை
கடன் கணக்கு எண்கள்:
1. 0000080000389
2. 0162101

ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்
எஸ்டி/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
(9710917596/ 9599108393)

எல்&டி பைனான்ஸ் லிமிடெட்
(முந்தைய பெயர் எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்)
பதிவு அலுவலகம்: எல்&டி பைனான்ஸ் லிமிடெட் பிருந்தாவன் பில்டிங், ப்ளாட் நம்பர் 177, சிஎஸ்டி ரோடு, கலினா, சாந்தாகுரூஸ் (ஈஸ்ட்), மும்பை - 400 098.
சிஐஎன் நம்பர்: L67120MH2008PLC181833
கிளை அலுவலகம்: சென்னை

L&T Finance

கையகப்படுத்துதல் அறிவிப்பு
[விதி-8(1)]

அதாவது கீழே கையெழுத்திட்டுள்ள, எல்&டி பைனான்ஸ் லிமிடெட்டின் (முந்தைய பெயர் எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட், 2002 கீழ் மற்றும் செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மெண்ட்) ரூல்ஸ், 2002-ன் கீழ் விதி (3) கீழ் பிரிவு 13(12)-ன் அதிகார வரம்பைப் பயன்படுத்தி டிமாண்ட் நோட்டீஸ் அளித்த தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் பாக்கித் தொகை மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் இதர கட்டணங்கள், செலவுகள் உட்பட இதர தொகைகளை செலுத்தும் தேதி வரை/கணக்கில் பணம் வரவாகும் வரை செலுத்தும்படி கூறி கடன்தாரர்/உப கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதிக்கு டிமாண்ட் நோட்டீஸ்கள் அளித்து இருந்தார். கடன்தாரர்/உப கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதி மேற்படி தொகையை திருப்பிச் செலுத்தத் தவறி விட்டனர். எனவே கடன்தாரர்/உப கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதிக்கு மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படும் அறிவிப்பு என்னவெனில் கீழே கையெழுத்திட்டவர் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பின்படி மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13 விதி 8-ன் படி கீழே விவரம் அளிக்கப்பட்டுள்ள மேற்படி சொத்தை சிம்பாலிக் பொசெஷன் ஆக கையகப்படுத்தி உள்ளார்.

கடன் கணக்கு எண்	கடன்தாரர்/கள் உப கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதியின் பெயர்	பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரம்	டிமாண்ட் அறிவிப்பு		கையகப்படுத்திய தேதி மற்றும் வகை
			தேதி	பாக்கியுள்ள தொகை (₹)	
H04573160323055712 H04534060623114743	1.திரு. சரவணன், எஸ் 2.திரு. முத்துக்குமரன், எஸ்	ஒட்டுமொத்த சொத்தின் முகவரி - மனை எண் 194, கிளாஸிக் ஸ்ட்ரீட், சோழிங்கநல்லூர், சென்னை - 600 119, நில அளவை 6000 சதுர அடி பரப்பளவு நிலத்தில் தரை தளத்தில் 2158 சதுர அடி கட்டப்பட்ட பகுதி, முதல் தளம் 1610 சதுர அடி கட்டப்பட்ட பகுதி, இரண்டாவது தளம் 300 சதுர அடி கட்டப்பட்ட பகுதி, மொத்தம் 4068 சதுர அடி கட்டப்பட்ட பகுதி, சர்வே எண் 595/14a (பகுதி) மற்றும் 595/14b (பகுதி), பட்டா எண் 6430, பட்டா எண் 595/10 படி, சோழிங்கநல்லூர் கிராமம், முன்பு தாம்பரம் வட்டம், இப்போது சோழிங்கநல்லூர் வட்டம், முன்பு காஞ்சிபுரம் மாவட்டம், இப்போது சென்னை மாவட்டம், பெருநகர சென்னை மாநகராட்சியில் அமைந்துள்ளது மற்றும் பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது: எல்லைகள்: வடக்கு: பாலவிநாயகர் கோவில் தெரு; தெற்கு: வளாக எண் 41, பாலாஜி நகர், 1வது பிரதான சாலை; கிழக்கு: வளாக எண் 38, பாலாஜி நகர், 1வது பிரதான சாலை; மேற்கு: வளாக எண் 13, பாலவிநாயகர் கோவில் தெரு அளவீடுகள்: வடக்குப் பக்கம்: 100 சதுர அடி தெற்குப் பக்கம்: 90 சதுர அடி கிழக்குப் பக்கம்: 60 சதுர அடி மேற்குப் பக்கம்: 50 சதுர அடி தென்மேற்கு மூலை : 10 அடி X 10 அடி (தள்சாய்வு) ஒட்டு மொத்தம் 6000 சதுர அடி நிலம், அதனுள் அமைந்த கட்டிடம் உட்பட, மேலும் பதிவு துணை மாவட்டம் நீலாங்கரை மற்றும் பதிவு மாவட்டம் சென்னை தெற்கு பகுதியில் அமைந்துள்ளது.	27.11.2024	ரூ. 3,03,54,620.22/- 04/11/2024 அன்று படி	20.01.2025 அடையாள உடைமை

கடன்தாரர்/உப கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதி குறிப்பாக மற்றும் பொதுவாக பொதுமக்கள் கீழே விபரம் குறிப்பிட்டுள்ள அந்த சொத்து சம்பந்தமாக எந்த விவகாரங்களிலும் ஈடுபடக்கூடாது மற்றும் அந்த சொத்து சம்பந்தப்பட்ட எந்த விவகாரங்களிலும் ஈடுபடுவோர் எல்&டி பைனான்ஸ் லிமிடெட்டுக்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகை மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் இதர கட்டணங்கள், செலவுகள் உட்பட இதர தொகைகளை செலுத்தும் தேதி வரை/கணக்கில் பணம் வரவாகும் வரை செலுத்தப் பொறுப்புடையவர்கள் என இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

தேதி: 24.01.2025
இடம்: சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி பைனான்ஸ் லிமிடெட்-க்காக